“தர்மம் சர,,

நவம்பர் (15 .11.2026) ● கும்பகோணம் ● பிரதி 27

ப்ரஹ்மஶ்ரீ குருராம கனபாடிகள் பேசுகிறார்

ஸ்ரீ சுப்ரமண்யர் – ஓர் அற்புத அவதார ரகசியம்!



பிரம்மாவின் மானஸ புத்திரர்களில் ஒருவரான ஸனத்குமாரர் மிகச்சிறந்த பிரம்ம ஞானி. உலகில் காணப்படும் அனைத்தும் ஒரே பரம்பொருளின் வெளிப்பாடுகளே என்பதை உணர்ந்து, ஆத்மானந்தத்தில் எப்போதும் நிலைத்திருந்தவர். அத்தகைய ஸனத்குமாரரே பின்னாளில் ஸ்ரீ சுப்ரமண்யராக அவதரித்தார் என்ற அற்புதமான செய்தியை திரிபுரா ரஹஸ்யம் என்னும் நூலின் மஹாத்மிய காண்டம் எடுத்துரைக்கிறது.

ஒருநாள் ஸனத்குமாரருக்கு ஒரு கனவு வந்தது. அதில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இடையே போர் நடைபெறுகிறது. அப்போரில் அவர் தேவசேனாபதியாக இருந்து அசுரர்களை அழிப்பதாகக் கண்டார். விழித்தெழுந்ததும் வியப்படைந்த அவர், தந்தையான பிரம்மாவிடம் இதன் பொருளைக் கேட்டார். அதற்கு பிரம்மா, முற்பிறவியில் ஸனத்குமாரர் வேதங்களை ஆழ்ந்து பயின்றவர் என்றும், வேத யாகங்களால் ஆராதிக்கப்படும் தேவர்களை அழிக்க நினைக்கும் அசுரர்களைச் சம்ஹாரம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவரிடம் அப்போது ஏற்பட்டது என்றும் விளக்கினார். அந்த எண்ணமே இப்பிறவியில் கனவாக வெளிப்பட்டுள்ளது. மேலும், ஸனத்குமாரர் நினைக்கும் எண்ணங்கள் சத்தியமாகும் வல்லமை பெற்றவை என்பதால், ஒருநாள் அவர் உண்மையிலேயே தேவசேனாபதியாக அவதரித்து அசுரர்களை அழிப்பார் என்றும் கூறினார். இதனை அறிந்த ஸனத்குமாரர், தமது ஆத்ம ஞான நிலையில் தொடர்ந்து அமைதியாக இருந்தார். ஆனால், அவரது கனவு வீணாகிவிடக்கூடாது என்று பரமேசுவரன் எண்ணினார். எனவே பார்வதி தேவியுடன் ஸனத்குமாரரின் ஆசிரமத்திற்கு எழுந்தருளினார்.

அனைத்தும் பரம்பொருளே என்ற ஆத்ம ஞான நிலையில் இருந்த ஸனத்குமாரர், ஈசுவரனையும் அதே பிரம்ம ஸ்வரூபமாகவே கண்டார். அவருடைய ஞானத்தை மெச்சிய பரமேசுவரன், அவரிடம் வரம் கேட்டார். ஸனத்குமாரரும் தமக்குப் புத்திரனாகப் பிறப்பதாக வரமளித்தார். பார்வதி தேவியும் அவரைத் தன் புத்திரனாகப் பெற விரும்பியதால், சிவபெருமானின் அக்னித் தேஜஸை அம்பிகையின் சரீர அம்சமான சரவணப் பொய்கை தாங்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அதன்படி சிவபெருமானின் நெற்றிக்கண்ணிலிருந்து வெளிப்பட்ட ஆறு அக்னிப் பொறிகளை கங்கையால் தாங்க முடியாமல், சரவணப் பொய்கையில் சேர்த்தாள். அங்கு அந்தத் தேஜஸ் ஆறுமுகப் பெருமானாக, ஸ்ரீ சரவணபவனாக அவதரித்தது. பின்னர் தேவசேனாபதியாகி அசுரர்களை அழித்து உலகைக் காத்தார். ஸனத்குமாரரே ஸ்கந்தர் என்பதைச் சாந்தோக்ய உபநிஷத்தும் உறுதிப்படுத்துகிறது. நாரத மகரிஷிக்கே ஆத்ம ஞானத்தை உபதேசித்த ஞானகுரு ஸனத்குமாரர். அனைத்துத் திசைகளிலும் நிறைந்திருப்பது ஒரே ஆத்மா என்றும், அதனை உணர்ந்து அதுவாகவே நிலைபெறுவதே உண்மையான ஆனந்தம் என்றும் அவர் உபதேசித்தார். முருகப்பெருமான் சிவபெருமானின் ஞானாக்னியின் வடிவமாக விளங்குகிறார். ஆதிசங்கரர் நிறுவிய ஆறு சமயங்களில் கௌமாரமும் ஒன்றாகும். தமது சுப்ரமண்ய புஜங்கத்தில், திருச்செந்தூர் முருகனைப் போற்றி, பக்தர்களைச் சம்சாரக் கடலிலிருந்து கரைசேர்க்கும் தெய்வமாக வர்ணிக்கிறார்.

ஞானமே முருகன்! முருகனே பரம்பொருள்! சரவணபவ!

தொடரும் .

ஸ்ரீமதி ஸௌம்யா குருராமன்



ஸ்ரீ சுப்ரமண்ய தத்துவம்

ஸ்ரீ சுப்ரமண்யப் பெருமான் ஞானத்தின் வடிவமாகவும், பரம்பொருளின் திருவுருவமாகவும் போற்றப்படுகிறார். சிவபெருமானின் ஞானாக்னியிலிருந்து தோன்றிய கந்தப்பெருமான், உலகிற்கு ஆத்ம தத்துவத்தை உணர்த்தும் ஞானகுருவாக விளங்குகிறார். இதனை ஆழமாக விளக்கும் அற்புதமான பகுதி ஸ்ரீ சிவரகசியத்தில் இடம்பெறும் ரிபு கீதையின் ஐந்தாவது அத்தியாயமான “சிவேன குமாரோபதேசவர்ணனம்” ஆகும்.

இவ்வத்தியாயம் சிவபெருமான் குமாரனுக்கு உபதேசித்த பரம ஞானத்தை எடுத்துரைக்கிறது. அதன் சாரம், ஜீவனும் பிரம்மமும் வேறல்ல; அனைத்திற்கும் ஆதாரமாக விளங்குவது ஒரே பரம்பொருளே என்பதாகும்.

“त्वमेव ब्रह्म एवासि त्वमेव परमो गुरुः” (ரிபு கீதை 5.2) என்று தொடங்கும் உபதேசம், நீயே பிரம்மம், நீயே பரமகுரு, நீயே அனைத்திற்கும் ஆதாரமானவன் என்று உணர்த்துகிறது. இங்கு பிரம்மம் என்பது எங்கோ இருக்கும் ஒரு பொருள் அல்ல; எல்லா உயிர்களிலும் ஒளிரும் சுத்த சைதன்யமே என்பதை உணர்த்துகிறது.

மேலும், “सत्योऽसि सिद्धोऽसि सनातनोऽसि मुक्तोऽसि मोक्षोऽसि सदाऽमृतोऽसि” (5.5) என்ற வாக்கியம், ஆத்மா நித்தியமானது, தூய்மையானது, என்றும் முக்த ஸ்வரூபமானது என்பதை விளக்குகிறது. நாம் உடலோ, மனமோ அல்ல; அவற்றை அறிகின்ற சாட்சியான சுத்த அறிவே நமது உண்மையான சொரூபம்.

இந்த உயர்ந்த ஞானமே ஸ்ரீ சுப்ரமண்ய தத்துவத்தின் அடிப்படையாகும். 'குகன்' என்ற திருநாமமே இதனை அழகாக உணர்த்துகிறது. குகை என்பது இதயத்தைக் குறிக்கும். அந்த இதயக் குகையில் சுத்த சைதன்யமாக ஒளிர்பவனே குகன். வெளியில் ஆறுமுகனாகக் காட்சியளிக்கும் முருகப்பெருமான், உள்ளத்தில் ஆத்மப் பிரகாசமாக விளங்குகிறார்.

ஆறுமுகம் என்பது வெறும் திருவுருவ அமைப்பு மட்டுமல்ல; ஆறு திசைகளிலும், எல்லா நிலைகளிலும் நிறைந்திருக்கும் பரம்பொருளின் மகிமையை நினைவூட்டுகிறது. வேல் அறியாமையை அழிக்கும் ஞானத்தின் அடையாளமாகவும், மயில் மனத்தின் உயர்வையும் ஆன்மிக வெற்றியையும் உணர்த்தும் அடையாளமாகவும் திகழ்கின்றன.

ரிபு கீதையின் 5.56-ஆம் ஸ்லோகத்தில், கடலில் தோன்றும் நீர்க்குமிழிகள் கடலிலேயே தோன்றி மறைவதைப் போல, எண்ணற்ற உலகங்களும் உயிர்களும் பரம்பொருளிலேயே தோன்றி அதிலேயே ஒடுங்குகின்றன என்ற ஆழ்ந்த தத்துவம் விளக்கப்படுகிறது. இதனை உணர்ந்தவர்களுக்கு சம்சார பந்தம் இல்லை என்பதே அதன் உட்பொருள்.

எனவே, முருகப்பெருமானை வழிபடுவது என்பது புறத்தில் ஒரு தெய்வத்தைத் தரிசிப்பதோடு நின்றுவிடாமல், நம்முள் ஒளிரும் ஆத்ம ஞானத்தை உணர்வதற்கான வழியாகவும் அமைகிறது. பக்தி மனதைத் தூய்மைப்படுத்துகிறது; ஞானம் உண்மையான ஆத்ம சொரூபத்தை வெளிப்படுத்துகிறது. இவ்விரண்டும் ஒன்றிணையும் இடமே சுப்ரமண்ய தத்துவம்.

முடிவாக, சிவபெருமானால் குமாரனுக்கு உபதேசிக்கப்பட்ட அத்வைத ஞானம், முருகப்பெருமானின் பரம தத்துவத்தை நமக்கு உணர்த்துகிறது. புறத்தில் ஆறுமுகனாகவும், அகத்தில் சுத்த சைதன்யமாகவும், எங்கும் நிறைந்த பரம்பொருளாகவும் விளங்குபவரே ஸ்ரீ சுப்ரமண்யர். அவரை உணர்வதே ஆத்ம ஞானம்; அவரிடம் சரணடைவதே முக்திக்கான வழி. குகனே பரம்பொருள்! முருகனே ஞானம்! சரவணபவ!

ஸ்ரீ குருகுஹ பரப்ரஹ்மணே நம:




“அடிப்படை தர்மங்கள்”

வித்வான்
விரூபாக்ஷ சர்மா

ஸ்ரீஸுப்³ரஹ்மண்ய ஶக்திஸ்துதி:

शक्ते भजे त्वां जगतो जनित्रीं सुखस्य दात्रीं प्रणतार्तिहन्त्रीम् ।
नमो नमस्ते गुहहस्तभूषे भूयो नमस्ते हृदि सन्निधत्स्व ॥

ஆதி சங்கரர் அருளிய இந்த அற்புத ஸ்லோகம், முருகப்பெருமானின் திருக்கரத்திற்கு அணிகலனாய் விளங்கும் சக்திவேலை அகிலத்தை ஈன்ற தாயாகப் போற்றுகிறது.
சரணடைந்த பக்தர்களின் துயரங்களைத் துடைத்தெறிந்து, வாழ்வில் நீங்காத பேரின்பத்தை வாரி வழங்கும் கருணை வடிவம் அந்தப் புனித வேலாயுதம்.



ஸ்ரீ சர்மா சாஸ்திரிகள்

பெரியோர்களுக்குத் தன் பெயரை உச்சரித்துக் கொண்டு அபிவாதனம் செய்யவேண்டும். ஆசீர்வாதத்தைப் பெறுவதற்காகச் செய்யப்படும் க்ரியை 'அபிவாதனம்'எனப்படும்.

பெரியவர்களை நமஸ்கரிக்கும் ப்ராமணன், 'அபிவாதயே' என்பதற்குப் பிறகு, 'தேவதத்த நாமாஹமஸ்மி' என்ற தன் பெயரை உச்சரிக்கவேண்டும். இதற்குமேல் 'போ;' என்ற சப்தத்தை உச்சரிக்க வேண்டும். நமஸ்கரிக்கப்படு கின்றவரை, அவர் பெயரைக் கொண்டு கூப்பிடுதல் யுக்தமல்லாததால் 'போ:' என்ற சப்தத்தினால் ஸம்போதிக்க வேண்டும்.

வேங்கடேஷ்- பூர்வமீமாம்ஸா சிரோமணி

அத்வைத கதைகள்

ॐ स्वाप्ययात्- ஓம் ச்வாப்யயாத்

ஒரு சிறுவனின் கதை

காசி நகருக்கு அருகே ஒரு சிறிய கிராமம் இருந்தது. அங்கே சோமன் என்ற பத்து வயது சிறுவன் தன் தாத்தாவுடன் வசித்து வந்தான். சோமன் எப்போதும் துருதுருவென ஓடிக்கொண்டே இருப்பான். காலையில் எழுந்தால் ஓடைக்குச் செல்வான், பிறகு நண்பர்களுடன் விளையாடுவான், மாடுகளை மேய்க்கப் போவான், மதிய வெயிலில் மரத்தில் ஏறுவான்.
ஒருநாள் மாலை, சோமன் மிகவும் களைப்பாக வீட்டிற்கு வந்தான். அவனுக்குப் பசி கூட எடுக்கவில்லை. தாத்தாவின் மடியில் தலை சாய்த்தவன், சில நிமிடங்களிலேயே ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டான்.
அடுத்த நாள் காலை எழுந்தபோது, சோமனின் முகம் ஒரு புது மலர் போலப் பொலிவாக இருந்தது. முதல் நாள் இருந்த களைப்பு மறைந்து, அவனிடம் ஒரு மகா அமைதி தென்பட்டது.

தாத்தாவின் விளக்கம்

சோமன் கேட்டான், "தாத்தா, நேற்று நான் ஓடி ஓடி மிகவும் சோர்ந்து போயிருந்தேன். ஆனால், இப்போது நான் ஒரு ராஜாவைப் போல உணர்கிறேன். தூக்கத்தில் எனக்கு என்ன நடந்தது? நான் எங்கே போயிருந்தேன்?"
தாத்தா சிரித்துக்கொண்டே சொன்னார், "சோமா, இதற்குத்தான் நம் வேதங்கள் 'ஸ்வாப்யயாத்' என்று சொல்கின்றன. 'ஸ்வ' என்றால் உன்னுடைய உண்மையான இருப்பிடம் (ஆன்மா), 'அப்யயாத்' என்றால் அதில் கரைந்து போதல் என்று பொருள்."
தாத்தா தொடர்ந்தார், "நீ விழித்திருக்கும்போது சோமனாக இருக்கிறாய். நீ ஒரு மாணவன், ஒரு பேரன், ஒரு நண்பன் எனப் பல வேடங்களைச் சுமக்கிறாய். இந்த வேடங்கள் உன்னைச் சோர்வடையச் செய்கின்றன. ஆனால், நீ தூங்கும்போது இந்த அடையாளங்கள் எதையும் எடுத்துச் செல்வதில்லை. உன் உடம்பையும், உன் புத்தியையும் கூட ஓரிடத்தில் விட்டுவிட்டு, உனது ஆணிவேராக இருக்கும் அந்தப் பரம்பொருளிடம் சென்று சேர்ந்துவிடுகிறாய்."

தொடரும்

.



கேள்வி : பௌர்ணமி சில நாட்களில் பாதி முதல் நாளிலும் பாதி மறு நாளிலும் வரும் பொது எந்த நாளில் பார்க்க வேண்டும்?

தர்மசாஸ்திரத்தில் விரதங்களுக்கான திதியைத் தீர்மானிக்கப் பல்வேறு கால அளவுகள் கூறப்பட்டுள்ளன. பௌர்ணமி விரதத்திற்கு மாலையில் சந்திரன் உதயமாகும் நேரமே பிரதானமானது.

"பௌர்ணமாஸ்யாம் விரதம் குர்யாத் சந்திரோதயவர்த்தினீம்"

(மாலை வேளையில் சந்திரன் உதிக்கும் போது பௌர்ணமி திதி எப்போது உள்ளதோ, அன்றே பௌர்ணமி விரத நாளாகும்.) பௌர்ணமி இரண்டு நாட்களில் பிரிந்து வரும்போது இரண்டு விதமான நிலைகள் ஏற்படும்:

நிலை 1 (மிகப் பொதுவானது):

முதல் நாள் பகல் 2 மணிக்கு மேல் பௌர்ணமி தொடங்கி, மறுநாள் பகல் 12 மணிக்கோ அல்லது 3 மணிக்கோ முடிந்துவிடுகிறது என்று வைத்துக்கொள்வோம்.இதில், முதல் நாள் மாலையில் (சந்திரோதயத்தின் போது) முழுமையாகப் பௌர்ணமி திதி இருக்கும். மறுநாள் மாலையில் பௌர்ணமி இருக்காது (பிரதமை வந்துவிடும்). எனவே, முதல் நாளே பௌர்ணமி விரத நாளாகக் கொள்ளப்பட வேண்டும். அன்றுதான் சத்யநாராயண பூஜை, கிரிவலம், மற்றும் உணவு நியமம் இருக்க வேண்டும்.

நிலை 2:

முதல் நாள் மாலை சூரிய அஸ்தமனத்திற்குப் பின் வெகுநேரம் கழித்து (இரவு 8 மணிக்கு மேல்) பௌர்ணமி தொடங்கி, மறுநாள் மாலை சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகும் நீடித்தால்: அப்போது மறுநாளே சந்திரோதய காலத்தில் பௌர்ணமி நீடிப்பதால், இரண்டாம் நாளை பௌர்ணமி தினமாகக் கொள்ள வேண்டும்.



நமது பாடசாலையில்
மஹா ஸ்கந்த ஷஷ்டி வைபவம்

கமல மாமலர் மருவு
வாசவன் கரம தேந்திய .....
கதிர்வேலா
ககன மேகமொ டதிர
வாரிதி கலங்க வேயெழு
..... கதிர்மாயா
சமர பூமியில் அசுரர்
சேனைகள் தகர வேபொரு
..... சரவணா
சரண தாமரை தினமு
மேத்துமோர் தமிய
னேனையும் .....
அருள்வாயே!